பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 07 2024 **WEDNESDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. ஆஸ்திரிய பிரதமர் திரு **Karl Nehammer**-வுடன், வர்த்தகம், முதலீடு, கலாச்சார ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

2. விக்கரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் மாலை ஐந்து மணி நிலவரப்படி சுமார் 78 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

3. தஞ்சாவூரில் டைடல் தொழில்நுட்ப பூங்கா விரைவில் திறக்கப்பட உள்ளதாக மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஜிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் 183 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

*---இனி விரிவான செய்திகள்----*

<<<<<<>>>>

ஆஸ்திரிய பிரதமர் திரு **Karl Nehammer** -வுடன் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பேச்சு நடத்தினார்.

அரசு முறைப்பயணமாக ஆஸ்திரியா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று வியன்னாவில் அந்நாட்டு பிரதமரை சந்தித்து,

வர்த்தகம், முதலீடு, அறிவியல் தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், புத்தாக்க தொழில்கள் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு, கலாச்சார ஒத்துழைப்பு, இருநாட்டு மக்கள் தொடர்பு உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விரிவாக பேச்சு நடத்தினார்.

உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

பருவநிலை மாறுபாடு, பயங்கரவாதம் உள்ளிட்ட பெரிய சவால்களை மனித சமுதாயம் தற்போது சந்தித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பில் இணையுமாறு ஆஸ்திரியாவுக்கு, அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பேரிடர் சவால்களை எதிர்கொள்வதற்கான கட்டமைப்புத் திட்டங்கள், உயிரி எரிபொருள் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இணைந்து செயல்படுமாறும் அவர் ஆஸ்திரியாவை கேட்டுக்கொண்டார்.இந்திய – ஆஸ்திரிய நல்லுறவுக்கு இருநாடுகளிலும் உள்ள ஜனநாயகமும், சட்டத்தின் ஆட்சியும் வலுவான அடித்தளமாக அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

யுக்ரைன் மற்றும் மேற்காசிய போர் நிலைமை குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

தற்போதைய சூழ்நிலையில் போர் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாக அமையாது என்றும் இரு தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

ஐ நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை கொண்டுவர வேண்டியது அவசியம் என்றும், அப்போதுதான் அந்த அமைப்புகள் வலுவாகவும், திறம்படவும் செயல்பட முடியும் என்று இரு தலைவர்களும் இப்பேச்சுக்களின்போது வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் உள்கட்டமைப்பு மேம்பாடு, மின்னணு கட்டமைப்பு, உள்ளிட்ட மேம்பாட்டுப்பணிகளை ஆஸ்திரிய பிரதமர் வரவேற்றார்.

<<<<<<>>>>

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாக நடைபெற்றது.

இன்று மாலை ஐந்து மணி நிலவரப்படி சுமார் 78 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

தஞ்சாவூரில் டைடல் பார்க் தொழில்நுட்ப வளாகம் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்போது நடைபெற்றுவரும் கட்டுமானப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டுவிடும் என்றும், அதன்பின்னர் முதலமைச்சர் இதனை திறந்துவைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

சிப்காட் முதல்கட்டப்பணிகள் நிறைவடைந்துவிட்டதாகவும், இரண்டாவது கட்டப்பணிகள் விரைவில் 250 ஏக்கர் பரப்பளவில் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளில் 43 சதவீதம் பெண்கள் பணிபுரிந்து வருவதாக தெரிவித்த திரு டி ஆர் பி ராஜா, அகில இந்திய அளவில் ஒப்பிடும்போது மற்ற மாநிலங்களைவிட, தமிழகத்தில் அதிக பெண்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிவதாகவும் கூறினார்.

<<<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் சென்றடைகின்றனவா என்பது குறித்து இம்மாதம் 24-ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு, மாநில அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு சி. குமரப்பன் ஆகியோர் கொண்ட அமர்வு, தாமாக முன்வந்து எடுத்துக்கொண்ட வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது.

இப்பகுதியில் உள்ள மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியுள்ளதாக தெரிவித்த நீதிபதிகள், அவர்களின் தற்போதைய நிலை குறித்து நீதிமன்றம் தெரிந்துகொள்ள விரும்புவதாக குறிப்பிட்டனர்.

ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட இந்த மலைப்பகுதியின் அனைத்து இடங்களிலும் பேருந்து வசதி, மருத்துவமனை வசதி உள்ளிட்டவை செய்துதரப்பட்டுள்ளதா என்று தெரிவிக்குமாறும், மாநில அரசை உயர்நீதிமன்ற அமர்வு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>

டெங்கு காய்ச்சல் பரவலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்திற்குபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெங்கு காய்ச்சல் வராமல் தடுப்பதற்கான திட்டங்கள், மாநிலங்களோடு இணைந்து காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சல் குறித்த தகவல்களை அளிப்பதற்கும், மருத்துவ உதவி பெறுவதற்கும் 24 மணிநேரமும் செயல்படும் தொலைபேசி உதவி மையம் ஒன்றை, மத்திய சுகாதார அமைச்சகம் விரைவில் அமைக்க உள்ளதாகவும் திரு ஜெ பி நட்டா கூறினார்.

<<<<<<>>>>

சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் நடப்பு கல்வியாண்டில் 3 மற்றும் 6-ஆம் வகுப்பு புத்தகங்களில் மட்டும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக மத்திய இடைநிலை கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மற்ற வகுப்புகளுக்கு பழைய பாடநூல்களையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா நகராட்சிப்பகுதியில், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலைய கட்டுமானப்பணிக்கு மாநில அமைச்சர் திரு ஆர்.காந்தி இன்று அடிக்கல் நாட்டினார்.

-------------

தூத்துக்குடி மாவட்டத்தில் ஜின் பாக்டரி ரோட்டில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் 46 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினியை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் இன்று வழங்கினார்.

----------------

அரசு பள்ளி மாணவிகள் உயர் கல்வி பயிலும் வரை மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் தற்போது சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக சென்னை ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் இலவச பயணச்சலுகை பெறுவதற்கு இம்மாதம் 18-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்துகொண்டு விண்ணப்பித்து பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

-------------------

நாமக்கல் மாவட்டம் கொத்தமங்கலத்தில் இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் உமா, 282 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஊரகப்பகுதிகளில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நாளை முதல் மூன்று நாட்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

-----------------

உதக மண்டலத்தில் உள்ள படகு இல்ல ஏரியை நவீன தொழில்நுட்பம் மூலம் தூய்மைப்படுத்துவது குறித்து மூத்த விஞ்ஞானி டேனியல் செல்லப்பா தலைமையிலான குழு இன்று ஆய்வு மேற்கொண்டது.

--------------

சென்னையிலிருந்து திருச்சிக்கு சென்ற மங்களூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்தவரிடமிருந்து ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட இரண்டே முக்கால் கிலோ தங்கம், 15 லட்சம் ரூபாய் ரொக்கம் ஆகியவற்றை ரயில்வே பாதுகாப்புப்படை காவல்துறை பறிமுதல் செய்தது.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் 183 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

ஹராரேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 182 ரன் எடுத்தது.

-----------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், சென்னை அணி இன்று திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.

சேலத்தில் இப்போட்டி இரவு மணி 7.15-க்கு தொடங்குகிறது.

---------

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Dhakshineswar Suresh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Thantub Suksumrarn** -ஐ வென்றார்.

***<<<<<<END>>>>***